## சுதந்திர போராட்டத்தில் தமிழ் நாட்டின் பங்கு

### 1] 1857 பெருங்கலகத்திற்கு முன்பாக போராட்டத்தில் பங்கேற்ற தமிழக முக்கிய தலைவர்கள்

1. புலித்தேவர்,
2. கட்டபொம்மன்,
3. மருது சகோதரர்கள்,
4. வேலுத்தம்பி.

### 2] 1857 பெருங்கலகத்திற்கு முன்பாக தமிழகத்தில் நடைபெற்ற முக்கிய கலகங்கள்

1. பாஞ்சாலங்குறிச்சி கலகம்,
2. 1801 ஆம் ஆண்டு நடைபெற்ற மருது சகோதரர்கள் பங்கேற்ற தென்னிந்திய கலகம்,
3. 1806 ஆம் ஆண்டு நடைபெற்ற வேலூர் சிப்பாய் கலகம்

### 3] இந்திய தேசிய போராட்டத்தில் பங்கேற்ற தமிழக முக்கிய தலைவர்கள் (1857 பெருங்கலகத்திற்கு பிறகு)

1. ஜி. சுப்ரமணிய அய்யர்,
2. வ.உ. சிதம்பரம்பிள்ளை,
3. சுப்ரமணிய பாரதி,
4. சி. ராசகோபாலாச்சாரி,
5. பெரியார் ஈ.வே. ராமசாமி,
6. திருப்பூர் குமரன்,
7. கே. காமராஜ்

### 4] வேலூர் கலகம் கி.பி ( 1806 ):

“இந்து வீரர்கள் தங்கள் நெற்றியில் சமயக்குறிகளை இடக்கூடாது என்றும், முஸ்லீம் வீரர்கள் தங்கள் தாடி மீசையை வெட்டி சுத்தமாக

வைத்துக்கொள்ள வேண்டும்” என்று ஆங்கிலேயர்கள் புகுத்திய கட்டுப்பாடுகள் வேலூர் கலகத்திற்கு வழி வகுத்தது.

இது ராணுவ வீரர்கள் இடையே கடும் அதிருப்தி ஏற்படுத்தியது. திப்புவின் பிள்ளைகள் இவர்களை கிளர்ச்சியில் ஈடுபட தூண்டினர்.

1806 ஜூலை 9 ஆம் நாள் திப்புவின் மகள் திருமணத்திற்கு கூடியிருந்த வீரர்கள் ஜூலை 10 ஆம் நாள் ஆங்கிலேயர்களை தாக்கி கோட்டையை கைப்பற்றினர். திப்புவின் இரண்டாவது மகன் பதேக் ஹைதர் அரசராக அறிவிக்கப்பட்டார். இருப்பினும் இக்கிளர்ச்சி ஆங்கிலேயர்களால் அடக்கப்பட்டது.

### 5] சென்னை மகாஜனசபை

சென்னை மாகாணத்தில் மக்கள் உரிமைகளை நிலை நாட்ட ஏற்படுத்தப்பட்ட முதல் அமைப்பு சென்னை சுதேசி சங்கம்.

நிறுவியவர்கள்: ஹார்லி, இலஷ்மி நரசு செட்டி மற்றும் சீனிவாசப் பிள்ளை - 1852 ஆம் ஆண்டு.

சென்னை சுதேசி சங்கம், சென்னை மகாஜன சபையுடன் இணைக்கப்பட்ட ஆண்டு 1884.

சென்னை மகாஜனசபையின் முதல் தலைவராக பி ரங்கா நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மகாஜனசபை 1920 ஆம் ஆண்டு முதல் இந்திய தேசிய காங்கிரஸுடன் இணைந்து செயல்பட்டது.

### 6] வ.உ. சிதம்பரம்பிள்ளை

- செக்கிழுத்த செம்மல் என்றும் கப்பலோட்டிய தமிழன் என்றும் அழைக்கப்பட்ட சிதம்பரம் பிள்ளை செப்டம்பர் 5 1872 ஆம் ஆண்டு ஒட்டப்பிடாரத்தில் பிறந்தார்.
- தூத்துக்குடி - கொழும்பு இடையே கப்பல் போக்குவரத்தை துவங்கியதால், கப்பலோட்டிய தமிழன் என அழைக்கப்பட்டார்.

- 1905 ஆம் ஆண்டு வங்காள பிரிவினை இவரை அரசியலில் ஈடுபட செய்தது.
- வ.வு.சி பாலகங்காதர திலகரை ஆதரித்தார். தமிழகத்தில் காங்கிரசின் கொள்கைகளை தீவிரமாக பரப்பினார்.இவர் மீது தேச துரோக குற்றம் சுமத்தப்பட்டு 40 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் செக்கிழுத்ததால், செக்கிழுத்த செம்மல் என்ற போற்றப்பட்டார்.

### 7] சுப்பிரமணிய சிவா

- சுப்ரமண்ய சிவா ஒரு சிறந்த விடுதலை போராட்ட வீரராகவும், சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார்.
- 1908-1922 காலத்தில் ஆங்கிலேயருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு பலமுறை கைது செய்யப்பட்டார்.
- சிறையில் இருந்த போது தொழு நோயால் பாதிக்கப்பட்டதால், இவருக்காகவே தொழு நோயாளிகள் ரயிலில் பயணிக்கக்கூடாது என்று ஆங்கில அரசு அறிவித்தது. எனவே நடை பயணமாகவே தனது பயணத்தை தொடர்ந்தார்.

### 8] சுப்பிரமணிய பாரதியார்

- சுப்ரமணிய பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டய புறத்தில் டிசம்பர் 11 1882 ஆம் ஆண்டு பிறந்தார்.1904 ஆம் ஆண்டு மதுரையில் தமிழாசிரியராக பணியாற்றினார்.
- சுதேச மித்ரன் பத்திரிக்கையின் ஆசிரியராகவும் பணியாற்றி உள்ளார்.
- 1907 ஆம் ஆண்டில் சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.
- பாலகங்காதர திலகர், அரவிந்த கோசுடன் இணைந்து சுய ராஜ்ஜியத்திற்கு ஆதரவாக செயல்பட்டார்.

- 1907 ஆம் ஆண்டில் இந்தியா என்ற தமிழ் வார பத்திரிகையின் ஆசிரியர் ஆனார். அதே சமயத்தில் " பாலா பாரதம்" என்ற ஆங்கில பத்திரிக்கையை வெளியிட்டார்.
- 1908 ஆம் ஆண்டில் வ.வு.சி க்கு எதிரான ஆங்கில அரசின் வழக்கில் வ.வு.சிக்கு சாதகமாக பாரதியார் சாட்சி வழங்கினார். எனவே பாரதியை கைது செய்ய ஆங்கில அரசு உத்தரவிட்டது. உடனே பாரதி புதுசேரிக்கு தப்பிச்ச சென்று, தனது இதழ்களை நடத்தி வந்தார். 1909 ஆம் ஆண்டு பாரதியின் அனைத்து படைப்பிற்கும் ஆங்கில அரசு தடை விதித்தது.

### 9] வாஞ்சிநாதன்

- வாஞ்சிநாதன் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பணியாற்றினார். காங்கிரசின் தீவிர செயல்பாடுகள் ஆங்கிலேயரை அச்சுறுத்தியதால், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளராக இருந்த ஆஷ் துறை என்பவர் நான்கு பேரை திருநெல்வேலியில் சுட்டுக்கொன்றார்.
- இக்கொடுஞ் செயலுக்கு பழி தீர்க்க எண்ணிய வாஞ்சிநாதன், மணியாச்சி புகை வண்டி நிலையத்திற்கு சென்று 1911, ஜூன் 11 அன்று ஆஷ் துறையை சுட்டு கொன்றார். தாமும் தற்கொலை செய்து கொண்டார். அவரது சட்டைப்பையில் இருந்து எடுக்கப்பட்ட கடிதத்தில் ஆஷ் துறையின் கொலை , சென்னை வரும் வரும் அரசர் ஐந்தாம் ஜார்ஜை கொலை செய்வதற்கான ஒத்திகை என்று எழுதப்பட்டிருந்தது.

### 10] திருப்பூர் குமரன்

- இவர் தேசியக்கொடி தடைக்கெதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டு, காவல் துறையினரின் தாக்குதலால் உயிர் துறந்தார். கொடி காத்த குமரன் என்று போற்றப்படுகிறார்.

### 11] எஸ். சத்யமூர்த்தி

- இவர் காமராசரின் அரசியல் குரு.

- 1939 ஆம் ஆண்டு சென்னை மேயராக இருந்த பொது பொதுக்கல்வி, தரமான குடி நீர் வழங்கல் மற்றும் வளமான வாழ்வு வழங்க பாடுபட்டார்.
- வழக்கறிஞராக வாழ்க்கையை தொடங்கி, இந்திய தேசிய காங்கிரஸில் முக்கிய தலைவர்களில் ஒருவராக உயர்ந்தார்.
- 1939 ஆம் ஆண்டு மேயராக இருந்த போது சென்னையில் நிலவிய மிக மோசமான குடி நீர் பஞ்சத்தை போக்க பூண்டி நீர்த்தேக்கம் கட்டுவதற்கு ஏற்பாடுகளை செய்தார். பின்னர் அதற்கு சத்யமூர்த்தி சாகர் என்னும் பெயர் காமராஜரால் வழங்கப்பட்டது. மேலும் தமிழ்நாடு காங்கிரசு கமிட்டி தலைமையகத்துக்கு சத்யமூர்த்தி பவன் என பெயரிடப்பட்டது.
- சுதேசி இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் போன்றவற்றில் பலமுறை பங்கேற்று சிறை சென்றுள்ளார்.

### 12] சி. ராஜகோபாலாச்சாரி

- ராஜாஜி என்று போற்றப்படும் ராசகோபாலாச்சாரி காந்தியின் தீவிர ஆதரவாளர்.
- 1930 ஆம் ஆண்டு வேதாரண்யம் சத்யாகிரகத்தை தலைமை ஏற்று நடத்தினார்.
- தமது தலைமையில் திருச்சியிலிருந்து 100 தொண்டர்களுடன் வேதாரண்யத்திற்கு சென்று கடலிலிருந்து உப்பு காய்ச்சி, உப்பு சட்டங்களை மீறினார்.
- 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநிலத்து தேர்தலில் சென்னை மாகாண முதலமைச்சர் ஆனார்.
- 1952 ஆம் ஆண்டு தமிழக முதல்வராகி, குலக்கல்வி திட்டத்தை தமிழகத்தில் அறிமுகம் செய்தார். இதற்கு காமராஜர் , பெரியார் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.
- எனவே தனது பதவியை 1954 ஆம் ஆண்டுக்கு ராஜினாமா செய்தார். காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார்.

- சுதந்திர கட்சியை தோற்றுவித்து இளம் இந்தியா என்ற பத்திரிக்கையை நடத்தினார். சக்கரவர்த்தி திருமகன் (இராமாயணம் ), வியாசர் விருந்து (மகாபாரதம்) போன்றவை இவர் எழுதிய உரைநடை நூல்களாகும்.
- 1955-இல் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. இவருடைய அரசியல் தந்திர செயல்களால் "சாணக்கியர்" என போற்றப்படுகிறார்.

13] காமராஜர்

- கர்ம வீரர் என்று போற்றப்பட்ட காமராஜர் விருது பட்டி என்று அழைக்கப்பட்ட விருதுநகரில் ஜூலை 15, 1903 ஆம் ஆண்டு பிறந்தார்.
- வேறு பெயர்கள் - கர்ம வீரர், பெருந்தலைவர்
- 1964 இல் லால் பகதூர் சாஸ்திரி மற்றும் 1966இல் இந்திரா காந்தியை பிரதமர் ஆக்கினார். தேசிய அரசியலில் இது போன்ற பெரும்பங்கு ஆற்றிய காரணத்தினால் "அரசை உருவாக்குபவர்" என போற்றப்பட்டார்.

14] பெரியார் ஈ.வே. ராமசாமி,

- தமிழ்நாட்டின் மிகச்சிறந்த சமூக சீர்திருத்த வாதி பெரியார்.
- மக்கள் மனதில் சுய மரியாதை, பகுத்தறிவு, பெண் விடுதலை ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் ஆகியவற்றிற்கு வித்திட்டவர் பெரியார்.
- பட்டம் - வைக்கம் வீரர், பெரியார்.
- 1919 இல் காங்கிரசில் இணைந்து, 1921 இல் சென்னை மாநில காங்கிரஸ் கமிட்டியின் தலைமை நிர்வாகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.பிறகு 1929 ஆம் ஆண்டு அதன் தலைவர் ஆனார்.
- 1925 ஆம் ஆண்டு சுய மரியாதை இயக்கத்தை தோற்றுவித்தார்
- நீதிக்கட்சியை பெரியார் திராவிடக்கழகம் என மாற்றி அமைத்தார்.
- கேரளா மாநிலம் வைக்கம் என்ற ஊரில் தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலய நுழைவு சட்டத்தை எதிர்த்து போராடி வெற்றி கண்டு , வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டார்.